## திண்டுக்கல் தனியார் மருத்துவமனையில் தீ விபத்து:

# உயிரிழந்த 6 பேரின் குடும்பங்களுக்கு தலா ரூ.3 லட்சம் நிதி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, டிச. 14-

திண்டுக்கல் தனியார் மருத்துவமனையில் நிகழ்ந்த தீ விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆறுதல் மற்றும் தலா ரூ.3 லட்சம் நிதியுதவி அறிவித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவிப்பு வெளியிட்டுள்ளார்.

இதுகுறித்து அவரது அறிவிப்பு வருமாறு:-

திண்டுக்கல் மாவட்டம், திண்டுக்கல் மாநகராட்சிப் பகுதியில் உள்ள ஒரு தனியார் மருத்துவமனையில் நேற்று முன்தினம் (12.12.2024) இரவு 9.30 மணியளவில் எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட தீ விபத்தில் தாடிக்கொம்பு, பாலதிருப்பதி நகரைச் சேர்ந்த மணிமுருகன் (வயது 30) த/பெ.ஜெகநாதன், திருமதி. மாரியம்மாள் (வயது 50) க/பெ.ஜெகநாதன், தேனி மாவட்டம் சீலம்பட்டி அம்பேத்கர் காலனியைச் சேர்ந்த சுருளி (வயது 50) த/பெ. கந்தசாமி, திருமதி.சுப்புலட்சுமி (வயது 45) க/பெ.சுருளி, திண்டுக்கல் என்.ஜி.ஓ. காலனியைச் சேர்ந்த ராஜசேகர் (வயது 36) த/பெ.ராஜேந்திரன், செல்வி.கோபிகா (வயது 6) த/பெ. ராஜசேகர் ஆகியோர் உயிரிழந்தனர் என்ற செய்தியறிந்து மிகவும் வருத்தமும் வேதனையும் அடைந்தேன்.

மேலும் இந்த விபத்தில் பலத்த காயமடைந்தவர்கள் அருகிலுள்ள அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டுள்ள நிலையில் அவர்களுக்கு சிறப்பான சிகிச்சை அளிக்கவும் உத்தரவிட்டுள்ளேன்.

இந்த தீ விபத்தில் உயிரிழந்த ஆறு நபர்களின் குடும்பத்தினருக்கு இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக்கொள்வதுடன் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா மூன்று இலட்சம் ரூபாயும், பலத்த காயமடைந்து தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருபவர்களுக்கு தலா ஒரு இலட்சம் ரூபாயும், இலேசான காயமடைந்து சிகிச்சை பெற்று வருபவர்களுக்கு தலா ஐம்பதாயிரம் ரூபாயும் வழங்கிட உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

## உயர்கல்வித்துறை பங்களிப்போரின் அரிய கருத்துகளைத் திரட்டித் தொகுத்து உயர்கல்வியின் தரத்தினை மேம்படுத்திடக் கருதியுள்ளோம்!

# முன்னேறிய நாடுகளுக்கு இணையான முன்னேற்ற நிலையினை தமிழ்நாடு எட்ட வேண்டும்!

## உயர்கல்வித் துறை பங்களிப்போர் கலந்தாய்வுக் கூட்டத்தில் – அமைச்சர் கோவி.செழியன் தலைமையுரை!

**சென்னை, டிச. 14 -**

**உயர்கல்வித்துறை பங்களிப்போரின் அரிய கருத்துகளைத் திரட்டித் தொகுத்து உயர்கல்வியின் தரத்தினை மேம்படுத்திடக் கருதியுள்ளோம் என்றும் முன்னேறிய நாடுகளுக்கு இணையாக முன்னேற்ற நிலையினை தமிழ்நாடு எட்ட வேண்டும் என்றும் உயர்கல்வித் துறை பங்களிப்போர் கலந்தாய்வுக் கூட்டத்தில் தலைமை வகித்து பேசிய அமைச்சர் கோவி.செழியன் குறிப்பிட்டார்.**



உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன் அவர்கள் தலைமையில் உயர்கல்வித் துறை பங்களிப்போர் கலந்தாய்வுக் கூட்டம் சென்னைப் பல்கலைக்கழக நூற்றாண்டு விழா அரங்கத்தில் 11.12.2024 அன்று நடைபெற்றது.

இக்கூட்டத்தில் உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன் தெரிவித்ததாவது:

தமிழ்நாடு அரசு உயர்கல்வித்துறையின் திட்டங்கள் முறையாகச் செயல்படுத்தப்பட்டு மாணவர்களின் கல்வித் திறனை மேலும் மேன்மை அடையச் செய்திடும் வழியில் உயர்கல்வித்துறை பங்களிப்பாளர்களை நேரடியாகச் சந்தித்து அவர்களின் கருத்தினைப் பெற்றுச் செயல்படுத்திட தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தியுள்ளார்கள். அதன்படி, உயர்கல்வித் துறை பங்களிப்போர் கூட்டம் திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர் மற்றும் மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களில் மண்டலங்கள் வாரியாக நடத்தப்பட்டன. அதன் தொடர்ச்சியாக சென்னை மண்டலத்திற்குட்பட்ட உயர்கல்வித் துறை பங்களிப்போர் கலந்தாய்வின் நான்காவது கூட்டம் இன்றைய தினம் சென்னைப் பல்கலைக்கழக நூற்றாண்டு விழா அரங்கத்தில் நடைபெறுகின்றது.

உயர்கல்வித்துறையினை மேலும் மேம்படுத்திட உயர்கல்வித் துறை அரசு அலுவலர்களுடன் உயர்கல்வித்துறையின் பங்களிப்போர் அனைவரையும் நேரில் சந்தித்துக் கலந்துரையாடி கருத்துகளைப் பெற இங்கு வந்துள்ளோம். இதன்மூலம் தாங்கள் வழங்கும் அரிய கருத்துகளைத் திரட்டித் தொகுத்து உயர்கல்வியின் தரத்தினை மேலும் மேம்படுத்திடக் கருதியுள்ளோம். 7.5 சதவீத இட ஒதுக்கீடு என்பது நீட் தேர்வினால் நமது கிராமப்புற மாணவர்கள் தங்களது உயர் கல்வியினைப் பெற இயலாத நிலையைக் கருத்தில் கொண்டு முந்தைய அரசால் மருத்துவ மாணவர்களுக்கு மட்டும் அறிவிக்கப்பட்டது. இதனால் இட ஒதுக்கீடு பெற்ற ஒரு மாணவி இந்த இட ஒதுக்கீட்டினால் படிக்க இடம் கிடைத்தும் போதிய வசதி இல்லாததால் மருத்துவப் படிப்பைத் தொடர இயலவில்லை எனத் தெரிவித்தபோது அப்போதைய எதிர்க்கட்சித் தலைவரும் தற்போதைய முதலமைச்சருமான நமது முதலமைச்சர் அவர்கள், இதனைக் கனிவுடன் கேட்டு, அப்போதே அந்த மாணவியின் முழுக் கல்விச் செலவையும் தானே ஏற்றுக்கொள்வதாக அறிவித்தார்கள்.

பின்னர் தமிழ்நாடு முதலமைச்சராக ஆட்சிப்பொறுப்பேற்றவுடன் மருத்துவப் படிப்பு மட்டுமல்லாமல் பள்ளிப்படிப்பை முடித்து பொறியியல், விவசாயம், சட்டம் உள்ளிட்ட அனைத்துப் பட்டப் படிப்பிலும் 7.5 சதவீத இட ஒதுக்கீட்டினைக் கொண்டு வந்ததுடன், இந்த இட ஒதுக்கீட்டின் கீழ் உயர்கல்வியில் சேர்க்கை பெறும் மாணவர்களுக்குக் கல்விக் கட்டணம், விடுதிக் கட்டணம், பேருந்து கட்டணம் உள்ளிட்ட அனைத்து கட்டணங்களையும் அரசே ஏற்கும் என அறிவித்து, அதற்காகப் பொறியியல் கல்விக்கு மட்டும் ரூ.213 கோடி ஒதுக்கீடு செய்துள்ளார்கள். இது மாணவர்களுக்கு நமது தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தாய் உள்ளத்தோடு செயல்படுத்தியுள்ள ஒரு மிகப்பெரிய திட்டமாகும்.

### நான் முதல்வன் என்ற முத்தான திட்டத்தை முதல்வர் வழங்கியுள்ளார்!

நல்ல தகுதியுடைய மாணவர்கள் வரவேண்டும் என்பதுடன் ஒவ்வொரு மாணவரும் தங்களது துறையில் தனித்தன்மை வாய்ந்த மாணவர்களாக திகழ வேண்டும் என்பது தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆவல். கல்வியில் தமிழ்நாடு இந்திய அளவில் இந்த இடத்தில் இருக்கிறது என்பதை விட உலகளவில் தமிழ்நாடு எந்த இடத்தில் இருக்கிறது என்று உயர்த்தித் தரவேண்டும் என்பதால் தான் "நான் முதல்வன்" என்ற முத்தான திட்டத்தை நமது முதலமைச்சர் வழங்கியுள்ளார். இத்திட்டத்தின் கீழ் இது வரை 27 இலட்சம் மாணாக்கர்களுக்குத் திறன் மேம்பாட்டுப் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது. இதில் சுமார் 1 இலட்சத்திற்கும் மேற்பட்டோர் தற்போது முக்கிய நிறுவனங்களில் பணி வாய்ப்புகள் பெற்றுப் பணி புரிந்து வருகின்றனர். புதுமைப் பெண் திட்டத்தின் கீழ் சுமார் 7 இலட்சம் மாணவிகள் பயனடைந்து வருகின்றனர். அதேபோல் இவ்வாண்டு தொடங்கப்பட்ட தமிழ்ப்புதல்வன் திட்டத் தின் கீழ் சுமார் 2 இலட்சம் மாணவர்கள் பயனடைந்து வருகின்றனர்.

ஒன்றிய அரசுப் பணியாளர் தேர்வாணையம், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் போன்ற தேர்வாணையங்களால் நடத்தப்படும் தேர்வுகளுக்கு மாணவர்களைத் தயார் செய்ய துணை முதலமைச்சர் அவர்களால் போட்டித்தேர்வு பயிற்சி மையம் மதுரையில் தொடங்கப்பட்டுள்ளது. மற்ற இடங்களிலும் தொடங்கப்படவுள்ளது. இதனை மாணாக்கர்கள் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

### தமிழ்நாட்டில் உயர்கல்வி படிப்போரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது!

தமிழ்நாட்டில் உயர்கல்வி படிப்பவர்கள் எண்ணிக்கை 47 சதவீதத்திற்கு மேல் உயர்ந்துள்ளது. இந்தியாவின் உயர்கல்வி சதவீதம் 28 ஆக இருக்கிறது. 2030க்குள் 50 சதவீதம் இலக்கு எட்டவேண்டும் என்பது ஒன்றிய அரசின் நோக்கமாகும். ஆனால் தமிழ்நாடு இப்பொழுதே 47 சதவீதத்தைத் தாண்டி விட்டது. உயர்கல்வியில், தொழில் உற்பத்தியில், தொழில் முன்னேற்றத்தில் உலக நாடுகளின் வளர்ச்சியைப் பற்றி அறிந்து, அந்த முன்னேறிய நாடுகளுக்கு இணையாக, முன்னேற்ற நிலையினை தமிழ்நாடு எட்ட வேண்டும் என தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உயர்கல்வித்துறைக்குப் பல்வேறு புதிய திட்டங்களை அறிவித்துச் செயல்படுத்தி வருகின்றார்கள்.

ஆசிரியர்கள், ஆசிரியரல்லாப் பணியாளர்கள், கல்லூரிகளின் தாளாளர்கள், செயலாளர்கள், முதல்வர்கள் இந்தக் கலந்தாய்வுக்கு வருகைதந்து தங்களது அரிய கருத்துகளைத் தெரிவிக்க வேண்டும். மேலும், உயர்கல்வி படித்த மாணவர்களுக்கு வேலைவாய்ப்பினைத் தருகின்ற தொழில் நிறுவனங்கள் சார்ந்த நிறுவனத் தலைவர்கள், மேலாண்மை இயக்குநர்கள், செயல் தலைவர்கள் எந்த மாதிரியான தகுதியுடைய மாணவர்களை எதிர்பார்க்கின்றார்கள் என்ற கருத்தையும், மாற்றுத்திறனாளிகள் உயர்கல்வி பெறுவதில் என்னென்ன இடர்பாடுகள் இருக்கின்றன, அவற்றைகளைவதற்கு என்னென்ன நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்பது குறித்தும் கேட்டறியப்படவுள்ளது.

### தேவைக்கேற்ப ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்கப்படும்!

மேலும், மாணவர்களின் பெற்றோர்களின் கருத்துகளையும், 7.5 சதவீத இடஒதுக்கீட்டில் படிக்கின்ற அரசுப்பள்ளிகளில் படித்த கிராமப்புற மாணவர்களின் கருத்துகளையும், தமிழ்ப்புதல்வன் மற்றும் புதுமைப்பெண் திட்டத்தின் கீழ் பயனடைந்து வரும் மாணவ மாணவியர்கள் என்னவிதமாகப் பயனடைந்துள்ளார்கள் என்பதையும், அவர்களின் கோரிக்கைகள் உள்ளிட்ட அனைத்துக் கருத்துகளையும் கேட்டறிந்து, அடுத்தடுத்த கட்ட மேல்நிலைக்கு உயர்கல்வித்துறையை எடுத்துச் செல்லவேண்டும் என்ற நோக்கத்தில்தான் இன்று கருத்துகளைக் கேட்டறிய வந்துள்ளோம். ஆசிரியர், ஆசிரியரில்லாப் பணியாளர்கள், சுயநிதி மற்றும் அரசு உதவி பெறும் கல்லூரி நிர்வாகத்தினர் தங்களுக்கு வழங்கப்பட வேண்டிய சலுகைகள் கிடைத்திடவும், அரசுத் திட்டங்களை முறையாக மாணவர்களுக்கு கொண்டு செல்லவும் தங்களது கருத்துகளை வழங்கினர். இங்கு வழங்கப்பட்ட கருத்துகள் அனைத்தும் உரிய பரிசீலனைக்கு உட்படுத்தப்பட்டு தேவைக்கேற்ப ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்கப்படும்.

தொழில் நிறுவனங்களில் பிரதிநிதிகள் தங்கள் பகுதியில் உள்ள தொழிலுக்கு ஏற்ற திறன் பெற்ற பணியாளர்கள் தேவை உள்ளதாகவும், அவர்களுக்குத் தொழில் நிறுவனங்களுடன் இணைந்து நான் முதல்வன் திட்டத்தின் கீழ் திறன் பயிற்சி அளிப்பது குறித்தும் தெரிவித்தனர். ஏற்கனவே திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர் மற்றும் மதுரை மாவட்டங்களில் தொழில் நிறுவனத்தாருடன் சந்தித்து உரையாடி உள்ளோம். அவர்களும் தங்கள் கருத்துகளைத் தெரிவித்துள்ளனர். அவர்கள் தெரிவித்ததையும் கருத்தில் கொண்டு மாணவர்களுக்குத் தொழில் நிறுவனங்களுடன் இணைந்து நான் முதல்வன் திட்டத்தின் கீழ் திறன் மேம்பாட்டுப் பயிற்சி வழங்கும் முறைகள் பரிசீலிக்கப்படும் என அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள்.

இந்நிகழ்ச்சியின் போது, உயர்கல்வித்துறை கூடுதல் தலைமைச்செயலாளர் மருத்துவர். கே.கோபால், தொழில்நுட்பக் கல்வி ஆணையர் டிஆப்ரகாம், தமிழ்நாடு உயர்கல்வி மன்றத் துணைத் தலைவர் டாக்டர் எம்.பி.விஜய குமார், (ஓய்வு) , பேராசிரியர் பெருமக்கள், கல்லூரி மாணவ, மாணவியர்கள் உட்பட அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

## 1958 நூலகங்களுக்கு ‘வை – பை’ வசதி, 188 நூலகங்களுக்கு கணினி இணைய வசதி!

# நமது முதல்வரின் ஆட்சிக் காலம்தான் ‘நூலகங்களின் பொற்காலம்’!

## சட்டப் பேரவையில் அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி பெருமிதம்!

**சென்னை, டிச. 14 -**

**சட்டப் பேரவையில் கேள்வி - நேரத்தில் பதிலளித்த அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி, தமிழ்நாடு முதல்வர் அவர்களின் ஆட்சிக் காலம்தான் நூலகங்களின் பொற்காலம் என்று பெருமிதத்துடன் குறிப்பிட்டார்.**



இது குறித்து சட்டப் பேரவையில் நடைபெற்ற விவாதம் வருமாறு:

**இரா.அருள் :** சேலம் (மேற்கு) தொகுதி, கே.ஆர். தோப்பூரில் உள்ள கிளை நூலகத்திற்கு புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

**அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி**, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை வணங்கி, தங்கள் அனுமதியோடு திருத்திய விடையை அளிக்கிறேன். சேலம் மேற்கு தொகுதி, கே.ஆர். தோப்பூரில் கிளை நூலகம் 8.9.2000 திலிருந்து செயல்பட்டு வருகிறது. இந்நூலகம் தற்போது தற்காலிகக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. இந்நூலகத்திற்கு 2024-2025 ஆம் ஆண்டிற்கான

வரவு-செலவுத் திட்ட அறிவிப்பின்படி நூலகங்களுக்கு கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்துதல் என்ற திட்டத்தின்கீழ் 500 சதுர அடியில் புதியக் கட்டடம் கட்டப்பட்டு வருகிறது. இந்தக் கல்வியாண்டே கட்டடப் பணிகள் முடிக்கப் பட்டு, வாசகர்களின் பயன்பாட்டிற்குக் கொண்டுவரப் படும் என்பதை உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**இரா.அருள்:** எங்களுடைய சேலம் மேற்கு தொகுதியில் சுவர்ணபுரி, சூரமங்கலம், கே.ஆர். தோப்பூர், சிவதாபுரம், சேலத்தாம்பட்டி, கொல்லப்பட்டி, முத்துநாயக்கம் பட்டி ஆகிய 7 இடங்களில் சின்ன சின்ன நூலகங்கள் இயங்கி வருகின்றன. இவை அனைத்தும் வாடகை கட்டடங்களில் இயங்கி வருகின்றன. இப்போது அமைச்சர் அவர்கள், கே.ஆர்.தோப்பூரில் என்னுடைய வேண்டுகோளை ஏற்று 500 சதுர அடியில் நூலகக் கட்டடத்தைக் கட்டிக்கொண்டிருக்கிறார்கள். அதற்கு நன்றி. ஆனாலும் கூட அந்த 500 சதுர அடியில் புத்தகங்கள் வைப்பதற்கு மட்டும்தான் போதுமானதாக இருக்கும். அதற்குமேல் மாணவர்கள் உட்கார்ந்து படிப்பதற்கான வாய்ப்பு இல்லை. நீங்கள் நூலகம் கட்டும்போது 500 சதுர அடி போதாது என்று 1000 சதுர அடியில் நூலகக் கட்டடங்கள் கட்டுவதற்கான plan போட வேண்டும் என்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன். 7 நூலகக் கட்டடங்களில் தற்போது ஒன்றுக்கு மட்டும் சொந்த கட்டடம் கட்டிக் கொடுத்திருக்கிறீர்கள். மீதமுள்ள 6 நூலகங்களும் வாடகைக் கட்டடங்களில் தான் இயங்கி வருகின்றன.

குறிப்பாக சேலத்தைப் பொறுத்தவரையில் சுவர்ணபுரி மற்றும் சூரமங்கலத்தில் ஒரு நல்ல நூலகங்கள் தினசரி 100லிருந்து 150 மாணவர்கள் போட்டித் தேர்விற்கு தயாராகும் மாணவர்கள் வந்து படிக்கும் வாய்ப்பு இருக்கிறது. அங்கு போட்டித் தேர்வுக்காக வழங்கப்படும் புத்தகங்களை அதிகப்படியாக வழங்க வேண்டும். போட்டித் தேர்வுக்கு தயாராகும் மாணவர்களுக்கு 6 முதல் 12 ஆம் வகுப்பு வரை தமிழ்நாடு முழுவதும் இருக்கிற புதிய பாடப் புத்தகங்கள் நூலகத்திலே வேண்டும் என்று கேட்கிறார்கள். அப்படி இருக்கும்போது முதலமைச்சர் அவர்களும் இருக்கிறார்கள். அவர்களும் கருணையோடு தமிழ்நாட்டில் உள்ள அனைத்து நூலகத்திற்கும் 6 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை பாடப் புத்தகங்களை வழங்க வேண்டும். அதேமாதிரி மேற்கு தொகுதியைப் பொறுத்தவரையில் 80 சதவிகிதம் நகரப் பகுதி, இப்போது இருக்கிற 7 நூலகங்களையும் தரமுயர்த்தி முழுநேர நூலகங்களாக உருவாக்க வேண்டும் என்று கேட்டு அமர்கிறேன். நன்றி.

**அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி:** சட்டமன்ற உறுப்பினர் தெரிவித்த கருத்துகளை முழுமையாக ஏற்றுக்கொள்கிறோம். அவருடைய தொகுதியிலே சூரமங்கலத்தில் ஒரு நூலகம் கட்டப்பட்டு தற்போது திறக்கப்படும் நிலையில் இருக்கிறது. உள்ளாட்சி அமைப்பின் மூலமாக 821 நூலகங்கள் கட்டப்பட்டு வருகிறது.

அதில் நம்முடைய சேலம் மாவட்டத்தைப் பொறுத்தவரை கிட்டத்தட்ட 35 நூலகங்கள் இன்றைக்கு முழுமையாக கட்டப்பட்டு வருகின்றன. இன்னொன்று, இன்றைக்கு 6 ஆம் வகுப்பிலிருந்து 12 ஆம் வகுப்பு வரை படிக்கக்கூடிய நம்முடைய மாநிலப் பாடத்திட்டத்திலுள்ள புத்தகங்கள்தான் போட்டித் தேர்வுகளுக்குத் தேவையான, பொருத்தமான புத்தகம் என்று தெரிவித்ததற்கு முதலில் நன்றி. ஏனென்றால், இன்றைக்கு நம்முடைய மாநிலப் பாடத்திட்டம் அதற்கேற்றவாறு வடிவமைக்கப்பட்டுள்ளது. எனவே, போட்டித் தேர்வுகளுக்கு 6 ஆம் வகுப்பிலிருந்து 12 ஆம் வகுப்பு வரை இருக்கக்கூடிய புத்தகங்களை படிக்கக்கூடிய தமிழ்வழி பயின்ற மாணவர்களுக்கும் சரி, ஆங்கிலவழி மாணவர்களுக்கும் சரி, அவர்களுக்குத் தேவையான அனைத்து புத்தகங்களும் முழுமையாக வழங்கப்பட்டுள்ளன. நான் ஆய்வுக்கு செல்லும் நூலகங்களில் basic ஆக நான் கேட்கும் கேள்வியே அதுதான். மாநிலப் பாடத்திட்டத்திலுள்ள புத்த கங்கள் நூலகங்கங்களுக்கு கிடைக்கப்பெற்றனவா? அப்படி இல்லாதபட்சத்தில் Textbook Corporation மூலமாக உடனடியாக புத்தகங்களை அந்த நூலகங்களுக்குத் தொடர்ந்து நாங்கள் வழங்கிக்கொண்டிருக்கிறோம். மற்றொன்று, நம்முடைய தமிழ்நாட்டு முதலமைச்சர் அவர்களுடைய இந்த ஆட்சிக்காலம்தான் நூலகங்களினுடைய 'பொற்காலம்' என்றே எடுத்துச்சொல்லலாம்.

ஏனென்றால், நம்முடைய முத்தமிழறிஞர் கலைஞர் கொண்டுவந்த அண்ணா நூற்றாண்டு நூலகம் என்று சொன்னால், நம்முடைய தமிழ்நாட்டு முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பெயரில் ஒரு நூலகம், தந்தை பெரியார் அவர்களின் பெயரில் ஒரு நூலகம், எங்களுடைய திருச்சி மாவட்டத்திற்கென்று தனியாக ஒரு நூலகம் என்றெல்லாம் கொண்டுவந்திருக்கிறார்.

இதற்கு போட்டி போடும் விதமாக நம்முடைய துணை முதலமைச்சர் அவர்கள், ஒவ்வொரு தொகுதிக்கும் கலைஞர் அவர்களின் பெயரில் ஒரு நூலகம் ஆரம்பிக்க வேண்டுமென்று தெரிவித்திருக்கிறார். ஒரு அறிவு சார்ந்த சமுதாயத்தை உருவாக்குகின்ற பணியில் திராவிட மாடல் அரசாங்கம் இன்றைக்கு ஈடுபட்டுக்கொண்டிருக்கின்றது. 'பொற்காலம்' என்று நான் சொல்வதற்கு காரணம் கிட்டத்தட்ட 1958 நூலகங்களுக்கு இதுவரை Wifi வசதி செய்யப்பட்டுள்ளது. 108 நூலகங்களுக்கு virtual reality வசதி செய்யப்பட்டுள்ளது. ஒட்டுமொத்த இந்தியாவிலேயே முதல்முறையாக virtual realityயை ஒரு மாநில அரசு கொண்டுவந்திருக்கிறது என்று சொன்னால், அதை நம்முடைய தமிழ்நாட்டில்தான் கொண்டு வந்திருக்கிறோம். திருப்பத்தூர், இராணிப்பேட்டை, காஞ்சிபுரம், தென்காசி போன்ற புதிதாக ஆரம்பிக்கப்பட்டிருக்கின்ற மாவட்ட மைய நுலகங்களுக்கு தலா 6 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. கள்ளக்குறிச்சிக்கும், மயிலாடுதுறைக்கும் இடங்கள் கிடைக்கப்பெற்றது என்று சொன்னால், உடனடியாக அவற்றிற்கான பணிகளும் மேற்கொள்ளப்படும். கண்டிப்பாக, நீங்கள் தெரிவித்ததுபோல், ஒரு அறிவு சார்ந்த சமுதாயத்தை, அறிஞர் அண்ணா அவர்கள் தெரிவித்ததுபோல்தான், 4000 மருத்துவமனையைக் கட்டியதில் பெருமை எங்களுக்கு கிடையாது, 300 பாலங்கள் கட்டியது பெருமை கிடையாது, 100 நியாய விலைக் கடைகளை திறப்பது பெருமை கிடையாது, சமுதாயத்தில் அடித்தளத்தில் இருக்கின்ற ஒரு மாணவன் சமமாக என்றைக்கு மதிக்கப்படுகிறானோ அதுதான் இந்த ஆட்சியினுடைய பெருமை என்று தெரிவித்திருக்கிறார்.

அதற்குத் தேவை அறிவு சார்ந்த சமுதாயம். அந்த அறிவு சார்ந்த சமுதாயத்திற்கு தேவை எங்களுடைய நூலகத் துறையுடைய பங்கு என்பது அதிகம் என்கின்ற வகையிலேதான் இன்றைக்கு அதிகப்படியான ஒரு முதலீட்டை இன்று நூலகத் துறையில் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் செய்து கொண்டிருக்கிறார். நீங்கள் கவலைப்பட வேண்டாம். நீங்கள் சொல்வது போன்று அந்த புத்தகங்கள் தேவைப்படுகின்ற பட்சத்தில் அவை கண்டிப்பாக வழங்கப்படும். 500 சதுர அடி என்பது போதவில்லை என்று சொன்னீர்கள். ஒட்டுமொத்தமாக uniform ஆக 500 சதுர அடியில்தான் நாங்கள் செய்துகொண்டிருக்கிறோம். அந்த 22 இலட்சம் ரூபாய் என்பது கட்டடம் கட்டுவதற்காக மட்டுமல்ல, அங்குள்ள தளவாடப் பொருட்கள், அங்கு அமர்ந்து படிப்பதற்கான வசதிகள் என்று எல்லாவற்றிற்கும் சேர்த்து தான் ஒதுக்கீடு செய்யப்படுகின்றது. இருந்தாலும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுசென்று, அதை அதிகப்படுத்த முடியுமா என்று அரசாங்கம் பரிசீலனை செய்யும் என்பதை உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**இரா.அருள்:** சேலம் மாவட்டத்தில் அறிவுசார் மையம் அமைக்கப்பட வேண்டுமென்று கடந்த கூட்டத்தொடரின்போது நான் வேண்டுகோள் வைத்தேன். தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அதை அறிவித்திருக்கிறார்கள். சேலம் மேற்கு தொகுதி என்பது சேலத்தினுடைய மையப்பகுதி, அந்த மேற்கு தொகுதியில் நல்ல ஒரு இடமாக பார்த்து, இந்த அறிவுசார் மையம் அமைக்கப்பட வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன். இங்கு புதிதுபுதிதாக, எழுத்தாளர்கள் பலர் பல புத்தகங்களை எழுதுகிறார்கள். ஆனால், அந்த புத்தகங்களை அவர்களால் marketing செய்ய இயலவில்லை. ஒருமுறை ஒரு புத்தகத்தை விற்க முடியவில்லையென்றால், அந்த எழுத்தாளர்கள் மனம் நொந்து, இனி மீண்டும் புத்தகமே எழுதாத ஒரு நிலைக்குச் சென்றுவிடுகிறார்கள். அந்த நிலையை மாற்றுவதற்காக புதிதுபுதிதாக புத்தகங்களை எழுதும் எழுத்தாளர்களை ஊக்குவிக்கும் வண்ணமாக அவர்கள் வெளியிடுகின்ற புத்தகத்தை, தமிழ்நாடு அரசாங்கமே கொள்முதல் செய்து, நூலகங்களில் வைக்க வேண்டும். அதேபோன்று, நம்முடைய பள்ளி மாணவர்களின் கற்றல் திறனை மேம்படுத்துவதற்கு, விளையாட்டுக்கு என்று period எப்படி இருக்கிறதோ, அதேபோன்று, வாரத்திலே இரண்டு பாடவேளையாவது நூலகத்தில் படிப்பதற்காக ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டு அமர்கிறேன்.

**அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி:** சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல நம்முடைய தமிழ்நாட்டு முதலமைச்சர் அவர்கள் ஒரு பத்திரிகையாளர்கள் நிகழ்ச்சியில் கலந்துகொள்ளும்போது, அந்த மேடையில் வைக்கப்பட்ட கோரிக்கை என்பது புத்தகம் கொள்முதல் அரசால் செய்யப்படுவதில்லை, அதை செய்ய வேண்டுமென்று கோரியிருந்தார்கள். அது வெளிப்படைத் தன்மையுடன் இருக்க வேண்டுமென்பதற்காக, புதியதாக ஒரு system கொண்டு வந்து, கிட்டத்தட்ட 11,000 புத்தகங்களுக்கான விண்ணப்பங்கள் பெறப்பட்டு, அவற்றில் கிட்டத்தட்ட 8,363 புத்தகங்கள் தற்போது தேர்வு செய்யப்பட்டிருக்கின்றன. டிசம்பர் மாதத்திற்குள்ளாக அவை முழுமையாக கொள்முதல் செய்யப்படும். எழுத்தாளர்கள் என்று சொல்லும்போது, என்றைக்கும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுடைய வழியில் ஆட்சி செய்யும் நம்முடைய தமிழ்நாட்டினுடைய முதலமைச்சர் அவர்கள், எழுத்தாளர்களுக்கு பல்வேறு அங்கீகாரத்தை வழங்கியிருக்கிறார்கள். குறிப்பாக, எங்களுடைய நூலகத் துறையின் சார்பாக நாங்கள் இலக்கியத் திரு விழாக்களை நடத்துகின்றோம். பொருநை சார்ந்து, தாமிரபரணி சார்ந்து, வைகை சார்ந்து, காவிரி சார்ந்து, ஏன் சென்னையைச் சார்ந்துகூட நாங்கள் இலக்கியத் திருவிழாக்களை நடத்தியிருக்கிறோம். அங்கே அதிகப்படியான எழுத்தாளர்களுக்கு, இலக்கியவாதிகளுக்கு முக்கியத்துவம் வழங்குகின்ற விதமாக அதை நாங்கள் செய்து கொண்டிருக்கிறோம். வெறும் பள்ளி மாணவர்களுக்கு மட்டும் இருந்ததை, இன்றைக்கு இளைஞர்களுக்கான இலக்கியத் திருவிழா என்று நாங்கள் கொண்டுவந்திருக்கிறோம். வெறும் சென்னையில் மட்டுமே நடந்துவந்த புத்தகத் திருவிழா என்பது இன்றைக்கு ஒட்டுமொத்தமாக தமிழ்நாடு முழுவதும், ஒவ்வொரு மாவட்டத்திலும் கொண்டுவருகின்ற பணிகளை நாம் செய்து கொண்டிருக்கிறோம். இவற்றின்வாயிலாக 69.272 கோடி மதிப்பிலான புத்தகங்கள் விற்பனையாகியிருக்கிறது என்பதே, ஒரு அறிவு சார்ந்த சமுதாயம் இன்றைக்கு அமைந்து கொண்டிருக்கிறது என்பதற்கான ஒரு எடுத்துக்காட்டாக இவற்றையெல்லாம் நான் பார்க்கிறேன். நீங்கள் சொல்வதுபோல இலக்கியவாதிகள், எழுத்தாளர்களுடைய புத்தகங்களையெல்லாம் கொள்முதல் செய்வது முழுமையாக முடிந்தபிறகு உங்களுக்கு அதற்கான முக்கியத்துவம் கண்டிப்பாக தெரியவரும் என்பதை உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.

# செம்பரம்பாக்கம் ஏரிக்கு வரும் நீரின் அளவு அதிகரிப்பு!

## விநாடிக்கு 4,500 கனஅடி உபரிநீர் வெளியேற்றம்!

சென்னை, டிச. 14 -

செம்பரம்பாக்கம் ஏரிக்கு வரும் நீரின் அளவு அதிகரித்து வருவதால், விநாடிக்கு 4 ஆயிரத்து 500 கனஅடி உபரிநீர் வெளியேற்றப்பட்டு வருகிறது.

24 அடி கொண்ட செம்பரம்பாக்கம் ஏரியின் நீர் மட்டம் 23 அடியை தாண்டியுள்ளதால், பாதுகாப்பு கருதி 5 கண் மதகு வழியாக ஆயிரம் கன அடி உபரி நீர் திறக்கப்பட்டுள்ளது.

ஏரியிலிருந்து நீர் வெளியேறும் வாய்க்கால் செல்லும் கிராமங்களான சிறுகளத்தூர், காவனூர், குன்றத்துர், திருமுடிவாக்கம், வழுதியம்பேடு, திருநீர்மலை மற்றும் அடையாறு ஆற்றின் இரு புறமும் உள்ள தாழ்வான பகுதிகளில் வசிப்பவர்கள் பாதுகாப்பான இடங்களுக்கு செல்லுமாறும் அறிவுறத்தப்பட்டுள்ளனர்.